# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

## சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)

## ''லுணுகம்வெஹெர'' இல் உத்தேசிக்கப்பட்டுள்ள சிக்கலான யானை புனருத்தாபன நிலையத்திற்காக (PERC) 30 கி மீ நீளத்திற்கு உயர் வலுவுள்ள வடத்திலான வேலியின் நிர்மாணம்

**Contract No.: LK-ESCAMP-DWC-68850-CW-RFB**

**Credit No.: 5792-LK**

1. சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட (ESCAMP) ஆகுசெலவிற்காக உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக, சோசலிச குடியரசானது கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை ''லுணுகம்வெஹெர'' இல் உத்தேசிக்கப்பட்டுள்ள சிக்கலான யானை புனருத்தாபன நிலையத்திற்காக (PERC) 30 கிமீ நீளத்திற்கு உயர் வலுவுள்ள வடத்திலான வேலியை நிர்மாணிப்பதற்கான பணக்கொடுப்பனவுகளுக்கு செலவழிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. VAT நீங்கலாக கீழே விபரிக்கப்பட்டவாறும் அண்ணளவாக 862 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமானதும் ''லுணுகம்வெஹெர'' இல் உத்தேசிக்கப்பட்டுள்ள சிக்கலான யானை புனருத்தாபன நிலையத்திற்காக (PERC) 30 கிமீ நீளத்திற்கு உயர் வலுவுள்ள வடத்திலான வேலியை நிர்மாணிப்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரரிடமிருந்து மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ESCAMP இன் சார்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

   இப்பணியானது பின்வருபவற்றை அடக்கும். யானைகளை தடுத்து வைப்பதற்கான வேலிக்கான 5400 எண்ணிக்கையான முன்தயாரிக்கப்பட்ட கொங்கிறீட் தூண்களை இணைத்தல் மற்றும் வழங்கல்; தூண்களுக்கு ஒரு படலம் பிரைமர் மற்றும் இரு படலங்கள் வெதர் ஷீல்ட் பெயிண்டுகளை பூசுதல்; கொங்கிறீட் தூண்களை நிறுவுவதற்காக அகழ்தல் மற்றும் அத்திவாரமிடல்; அடையாளமிடப்பட்ட எல்லையாகிய 30 கிமீ நீளத்திற்கு கொங்கிறீட் தூண்களை நிறுவுதல் மற்றும் பதித்தல் கொங்கிறீட் தூண்களுள் ஏழு வரிசைகளில் உயர் வலுவுள்ள வடங்களை பதித்தல் இன்னும் பலவும். நிர்மாணக் காலப்பகுதியானது அண்ணளவாக 24 மாதங்களாகும்.

3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தகைமை தகவுத்திறனை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் கட்டிடங்கள் அல்லது நெடுஞ்சாலைகளின் விஷேடத்துனர்களாக சி-1 அல்லது மேற்பட்ட தரத்தில் CIDA உடன் (முன்னைய ICTAD) பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது ஆகக் குறைந்தது 650 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும் (விலைமனுவை திறக்கும் திகதி வரையும்)
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலான ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது செயற்றிட்ட குறிப்பிட்ட கடன் வசதிகள் 110 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் (ESCAMP) பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி இல.: 011-2888426, 011-2888427) 2019.03.08 ஆம் திகதி வரையும் அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

6. 2019.01.28 ஆம் திகதியிலிருந்து 2019.03.08 ஆம் திகதி வரையும் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 80,000 ரூபாவைச் (எண்பதாயிரம் ரூபா) செலுத்திய பின்னர், CIDA பதிவின் பிரதியொன்றுடன் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளருக்கு (தொலைபேசி இல.: 011-2888426, 011-2888427) எழுத்துமூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரரினால் கொள்வனவு செய்யப்படலாம்.

7. பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் ESCAMP இன் செயற்றிட்ட கணக்காளரிடம் செலுத்தப்படல் வேண்டும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்பட்டு அவையிரண்டும் இன்னொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு அத்தபாலுறையின் மேற்பகுதியில் ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு ஆகியன எழுதப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில்/ நேரடியாகவே 2019.03.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்/ஒப்படைக்கப்படல் வேண்டும்.

9. விலைமனுக்கள் 2019.03.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை , 500 ஆம் இலக்கத்தின் 8 ஆம் மாடியிலுள்ள மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் சேர்க்கப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

10. விலைமனுக்கள் 2019.06.12 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

11. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ''விலைமனுப்பிணையொன்றுடன்'' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது 10,000,000 ரூபாவாக (பத்து மில்லியன் ரூபா) இருப்பதுடன் 2019.10.07 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

12. செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிராத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

13. கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்கத்தின் 8 ஆம் மாடியிலுள்ள மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பிரிவில் 2019.02.11 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,**
**8 ஆம் மாடி, இல.: 500,** T.B. **ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**